*Copy of Deposition*

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

*HMOP No.04 /2024*

2024 ம் ஆண்டு **டிசம்பர் மாதம் 12-ம் தேதி** மனுதாரர் தரப்பு சாட்சி **ம.சா.1-ன்** வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**ம.சா.1 அருண்குமார்**

**குறுக்கு விசாரணை:-**

எனக்கு பூர்வீகம் வடுகனூர் ஆகும். எதிர் மனுதாரரின் பூர்வீகம் அணைகவுண்டன்புதூர் ஆகும். என்னுடைய ஊருக்கும் எதிர் மனுதாரர் ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் தற்போது உதவி அஞ்சல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எந்த வருடம் நான் பணிக்கு சேர்ந்தேன் என்றால் 2006 ம் வருடம் பணிக்கு சேர்ந்தேன். முதன் முதலாக எந்த ஊரில் பணிக்கு சேர்ந்தேன் என்றால் பவானியில் பணிக்கு சேர்ந்தேன். பவானியில் 15 நாட்கள் பணிபுரிந்தேன். பவானியில் இருந்து கொடுமுடிக்கு பணிமாறுதல் அடைந்தேன். கொடுமுடியில் எத்தனை வருடம் வேலை பார்த்தேன் என்றால் சுமார் 6 1/2 வருடங்கள் வேலை பார்த்தேன். நான் கொடுமுடியில் வேலை பார்த்தபோது எதிர் மனுதாரர் நடுப்பாளையத்தில் உள்ள கிருத்திகா டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். எதிர் மனுதாரரை எனக்கு சிறுவயதில் இருந்தே தெரியும் என்றால் தெரியாது, எதிர் மனுதாரரை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் எதிர் மனுதாரரின் உறவினர்கள் எனக்கும் உறவினர்கள் என்பதால் அவர்கள் மூலமாக எதிர்

மனுதாரரை பற்றி தெரிந்து கொண்டேன், அது எப்போது தெரிந்து கொண்டேன் என்று ஞாபகம் இல்லை. எதிர் மனுதாரரின் அம்மா ஊர் எங்கள் ஊராகிய வடுகனூர் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் சிறுவயதில் இருந்தே அவரது அம்மாயி வீடான வடுகனூருக்கு வரபோவது வழக்கம் என்றால் அவரது அம்மாயி வீடும், எங்கள் வீடும் தொலைவில் இருப்பதால் அதைபற்றி தெரியாது. எங்கள் வீட்டிற்கும், எதிர் மனுதாரரின் அம்மாயி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1000 மீட்டர் தூரம் இருக்கும். எங்கள் ஊரில் நடக்கும் பகவதி அம்மன் திருவிழா, பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகைகளுக்கு எதிர் மனுதாரர் தனது பாட்டி வீட்டிற்கு வந்துபோவார் என்றும், அந்த சமயத்திலேயே எதிர் மனுதாரரை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரரின் தாய்மாமா எனக்கு பங்காளி முறை என்றால் சரிதான். எங்களது தோட்டமும், எதிர் மனுதாரரின் தாய்மாமா தோட்டமும் பக்கத்து பக்கத்து தோட்டம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும் எதிர் மனுதாரரின் தாய்மாமா குடும்பத்திற்கும் பிரச்சனை இருப்பதாக கூறியுள்ளேன் என்றும், அந்த பிரச்சனை 2012ம் வருடத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகிறதா என்றால் இல்லை, அதற்கு பின்புதான் பிரச்சனை இருந்து வருகிறது. என் அம்மா உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அம்மாவுடன் சேர்த்து மொத்தம் 4 பேர்கள் ஆவார்கள். என் அம்மாயி ஊருக்கும், எங்கள் ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 4 முதல் 5 கி.மீ தூரம் இருக்கும். என் அம்மாவுடன் பிறந்தவர்கள் பெண்கள்தான், என் அம்மா வடுகனூரிலும், மற்ற என் அம்மாவின் சகோதரிகளை எங்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் என்னுடைய முதல் சித்தி வடுகனூரிலும், 2வது சித்தி வளையபாளையத்திலும், 3வது சித்தி பாரப்பாளையத்திலும் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். நானும் எதிர் மனுதாரரும் ஒருவரை ஒருவர் பழகி அதன் பிறகு பெரியோர்களின் சம்மதத்தின் பேரில் நடந்த திருமணம் என்றால் சரிதான். எதிர்

*Copy of Deposition*

மனுதாரருக்கு முதன் முதலில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபோது விவாகரத்து கேட்டுதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதற்காக நான் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு அதில் விருப்பம் இல்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு எதிர் மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுத்து அதில் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விரும்பி என்னை எதிர் மனுதாரருடன் சேர்த்து வைக்க வேண்டும் என்று திருமண பந்தத்தை மீட்டெடுக்க வேண்டி மனுவை ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவை எதிர் மனுதாரர் தாக்கல் செய்த பிறகுதான் நான் விவாகரத்து கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sdxxx M. Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi |